செய்தி வெளியீடு: 37 நாள்: 20.06.2019

*தேனி மாவட்டம்*
*பிரதம மந்திரி விவசாயிகள் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ்*
*2 எக்டேருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பயன்பெற*
*சிறப்பு முகாம் நடைபெற உள்ளது*
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

**********

தேனி மாவட்டம் பிரதம மந்திரி விவசாயிகள் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற 2 எக்டேருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளும் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

அரசாணை (பல்வகை) எண். 42, வேளாண்மைத்துறை, நாள்: 09.02.2019 ன்படி தமிழ்நாட்டில் உள்ள 2 எக்டேர் வரை நிலம் வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6000/- வழங்கும் மத்திய அரசின் பிரதம மந்திரி விவசாயிகள் ஊக்கத்தொகை திட்டமானது 01.02.2019-ஐ தகுதிநாளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களது வங்கிக் கணக்கில் 4 மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2000/- வரவு வைக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் உள்ள வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கடிதம் நாள்: 07.06.2019ன்படி இத்திட்டமானது 2 எக்டேருக்கு மேல் நிலம் வைத்துள்ள நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மேலும் 01.02.2019க்கு முன்பு இறந்த பட்டாதாரர்களின் வாரிசுதார்கள் வாரிசுரிமைப்படி பட்டா மாறுதல் செய்து அதனடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

தேனி மாவட்டத்தில் அனைத்து தகுதியுள்ள விவசாயிகளும் விடுபடாமல் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பொருட்டு வரும் 22.06.2019 (சனிக்கிழமை) மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியான நடுத்தர/ பெரிய விவசாயிகள் தவறாமல் இம்முகாமில் கலந்து கொண்டு **ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் பட்டா நகல்** ஆகியவைகளுடன் சென்று பதிவு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**